පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 222
ආයතනයේ නම : ඩිජිටල් ආර්ථික අමාත්‍යාංශය
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : *222*
நிறுவனத்தின் பெயர் : டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
பாராளுமன்றத்தின் அரசு கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No : 222
Name of the institution: Ministry of Digital Economy
Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of
Standing Order No. 119(4)

*மாதிரி 01*

பாராளுமன்ற வெளியீடு வரிசை எண் :- 222

நிறுவனத்தின் பெயர் :- டிஜிட்டல் பொருளாதார அமைச்சு

| **தொடர் இல** | **அவதானம்** | **அவதானம் தொடர்பான பதில் / தற்போதைய நிலைமை** |
|---|---|---|
| 01 | தகவல் தொழில்நுட்ப அமைப்புகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்கான அரசாங்கக் கணக்குக் குழுவின் உபகுழுவால் 2016.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதின் முன்னேற்றம். | அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்தின்படி, பல்வேறு நிறுவனங்களின் தற்போதைய அமைப்புகளை மேலும் விரிவான கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைக்க டிஜிட்டல் பொருளாதார அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய தரவுப் பரிமாற்றம் (National Data Exchange) எனப்படும் இந்தக் கருத்திட்டத்தின் கீழ், அனைத்து தரவு அமைப்புகளையும் ஒரு மையப்படுத்தப்பட்ட தளம் மூலம் இணைக்கவும், செயல்திறனை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அங்கு, முதன்மையாக வருமானத்தினை சேகரிக்கும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதுடன், அந்த நிறுவனங்களின் தற்போதைய அமைப்புகளின் நன்மைகள் இவ்வாறு மேம்படுத்தப்பட்டு, டிஜிட்டல் வட்டம் மூலம் வருமானச் சேகரிப்பு விருத்தி செய்யப்படுகிறது. வருமானம் வசூல் செய்யும் பிரதானமான நிறுவனங்களை ஒருங்கிணைத்துக்கொண்டு 2026 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இந்தக் கருத்திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |
| 02. | அரசாங்க நிறுவனங்களின் தரவு அமைப்புகளை ஒருங்கிணைக்கப் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் தேசிய அடையாள அட்டையை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் ஏற்கனவே 15 அரச நிறுவனங்கள் மற்றும் 89 அரை அரச, நிதி மற்றும் தனியார் நிறுவனங்களுடன் துறைசார் தரவுகளைப் பகிர்ந்து கொள்கிறது.<br><br>மேலும், 03 வெளி அரச நிறுவனங்களின் தரவு பரிமாற்ற வசதி ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் அதன் செயற்பாடுகளுக்காக பெறப்பட்டுள்ளது. (தலைமை பதிவாளர் திணைக்களம், குடிவரவு |

| | | |
|---|---|---|
| | | மற்றும் குடியகல்வுத் திணைக்களம், தேர்தல் ஆணைக்குழு) மேலும், eNIC மற்றும் SLUDI ஆகிய இரண்டு கருத்திட்டங்களுக்கும் பதிலாக, ஜனவரி 2026 முதல் ஒரே கருத்திட்டமாக, இந்திய அரசாங்கத்தின் உதவியை உகந்த முறையில் பயன்படுத்தி அரசாங்கத்தின் ஒட்டுமொத்த டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்தின் கீழ் குடிமக்கள் அடையாளத்திற்கு அப்பாற்பட்ட பரந்த பகுதிக்கான மேலதிக பணிகளை மேற்கொள்வதற்கான அமைச்சரவை அனுமதியின் பின்னணியில் அது தொடர்பான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. ஏப்ரல் 2025 இல், இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான SLUDIக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உத்தியோகபூர்வ புதுப்பிப்பு மேற்கொள்ளப்பட்டு, ஒருங்கிணைந்த கருத்திட்ட வழிகாட்டுதல் குழு நிறுவப்பட்டுள்ளதுடன், ஆ.ப.தி. ஆணையாளர் நாயகம் அதன் நிரந்தர உறுப்பினர் என்பதனால் DPI முகாமைத்துவம் மற்றும் மையப்படுத்தப்பட்ட தரவுப் பரிமாற்றம் மற்றும் தரவுப் பாதுகாப்பு சட்டங்களை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்ப/சட்ட சூழலில் அரச நிறுவனங்களில் தரவு அமைப்புகளை ஒருங்கிணைக்க டிஜிட்டல் ஐடிகளின் நடைமுறை பயன்பாட்டை, மேம்படுத்தலாம். |
| 03. | அரசாங்க நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்கும் போது, ஒருங்கிணைந்த தரவு அமைப்புகளைப் பராமரிக்கத் தேவையான மனித வளங்களை அரசாங்க தகவல் தொழில்நுட்ப சேவையின் சம்பளக் கட்டமைப்புடன் ஈர்ப்பது கடினம் எனும் விடயம் குழுவுக்கு தெரியவந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான பரந்த திட்டத்தின் கீழ் புதிய அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத் திட்டத்தின்படி, அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய பொது டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் (Digital Public Infrastructure – DPI)) நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் குறித்து அனைத்து அரச துறைகளுக்கும் தெரியப்படுத்துதல் டிஜிட்டல் பொருளாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| | | அதன் கீழ் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04. | அந்த நிறுவனங்களின் தரவு அமைப்புகளை இணைப்பதன் மூலம் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் இணைக்கப்பட்ட அரசாங்கக் கோட்பாடு *(Connected Government).* | புதிய அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்தின் முக்கிய பணிகளில் ஒன்று இணைக்கப்பட்ட அரசாங்கத்தை *(Connected Government)* உருவாக்குவதாகும். அதற்காக, இலங்கையின் அரச வலையமைப்பு, இலங்கை அரச மேகம், இலங்கை தேசிய தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டை, தேசிய தரவு பரிமாற்றம் ஆகிய முக்கிய கருத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்தக் கருத்திட்டங்களால் வழங்கப்படும் வசதிகளான அனைத்து அரச நிறுவனங்களின் தரவு அமைப்புகளையும் தேசிய தரவு பரிமாற்றம் மூலம் இணைக்கும். இந்த கருத்திட்டங்களின் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்ப மற்றும் கடன் வசதிகளை வழங்க உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஒப்புதல் அளித்துள்ளன. |
| 05. | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் நிறுவப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சுமார் 8.5 மில்லியன் டிஜிட்டல் தரவுகளும், சுமார் 16 மில்லியன் டிஜிட்டல் அல்லாத தரவுகளும் உள்ளன மேலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் அறிமுகப்படுத்திய *NIC Lookup* இணைய சேவையின் மூலம், 15 அரச நிறுவனங்கள் மற்றும் 89 அரை அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் திணைக்களமானது இந்தத் தரவுகளைப் பரிமாறிக் கொள்கிறதுடன் *API (Application Programing Interface)* சேவையினூடாக. 02 அரச நிறுவனங்கள் மற்றும் 12 அரை அரச, நிதி மற்றும் தனியார் நிறுவனங்களுடனும் திணைக்களமானது மேற்குறிப்பிட்ட தரவுகளை பரிமாற்றம் செய்கிறது. |

| | | |
|---|---|---|
| | | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், இலங்கை செர்ட் நிறுவனத்தின் கருத்திட்டமான தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்தில் *(NCSOC)* உள்ளடக்கப்பட வேண்டிய முக்கியமான தகவல்கள் உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அரச நிறுவனமாக அமைச்சரவையால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதால் அந்தத் திணைக்களத்தின் அனைத்து டிஜிட்டல் சேவைகளுக்கும் தேவையான பாதுகாப்பு அதிகரித்த கவனத்தைப் பெற்று வருகிறது. |
| *06.* | குழுவின் அவதானிப்புகள் | தரவு அமைப்புகளை ஒருங்கிணைக்கும் போது பொதுவான சின்னங்களாக தேசிய அடையாள இலக்கம், வரி செலுத்துவோர் அடையாள எண் மற்றும் வெளிநாட்டினருக்கான கடவுச்சீட்டு எண் ஆகியவற்றை சேர்க்க நடவடிக்கை எடுப்பதற்கான ஆலோசனைகளுடன் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் ஏற்கனவே ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. ஏனைய விவகாரங்கள் தொடர்பாகவும், புதிய அரசின் டிஜிட்டல் பொருளாதார கோட்பாட்டின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் கீழ், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் அரச டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. |

வருண ஸ்ரீ தனபால
செயலாளர் (ப.க.)
டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
*2025.09.* 24